100310

No. of Printed Pages : **2**

# GS-139

15A

IV Semester B.A./B.Sc./B.Sc.(FAD)/B.C.A Examination, May/June 2019

**LANGUAGE TAMIL - IV**

**(Part - I) (Paper - IV)**

F+R (CBCS) (2015-16 & Onwards)

Time : 3 Hours Max. Marks : 70

**I. விரிவான விடை தருக.**

1. புறங்கூறாமை என்னும் அதிகாரத்தின் கருத்துகளைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக. **10**

**அல்லது**

புலவியின் நுணுக்கங்கள் குறித்து திருக்குறள் கூறுவன யாவை ?

2. காவிரி நதியின் சிறப்பினை கடியலூர் உருத்திரங் கண்ணனார் வழிநின்று விளக்குக. **10**

**அல்லது**

பட்டினப்பாலை காட்டும் பண்டக சாலை, அங்காடித் தெரு குறித்து எழுதுக.

**II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

1. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல் **4**
குலன்உடையான் கண்ணே உள.

**அல்லது**

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

2. நாள்மீன் விராய கோள்மீன் போல **4**
மலர்தலை மன்றத்துப் பலர்உடன் குழீஇ.

**அல்லது**

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்குஇழை ஒழிய
வாரேன்! வாழிய நெஞ்சே!

**III. (அ) ஒன்று குறித்துத் திறனாய்க.** **15**

1. தில்லை நடராசர் திருக்கோயில் இராமலிங்க சுவாமிகளுக்கும், கோயில் தீட்சிதர்களுக்கும் இடையே நடந்த வாக்குவாதம்.
2. தொழுவூர் வேலாயுத முதலியாரின் பாத்திரப் படைப்பை ஆய்க.

**P.T.O.**

2x5=10

(ஆ) இரண்டிற்கு சுருக்கமான விடை தருக.

1. முத்தியாலு அம்மாள் பாத்திரம் குறித்து எழுதுக.
2. மனுமுறை கண்ட வாசகம் என்பதை விளக்குக.
3. மூடமுண்ட வித்துவான் - இதன் விளக்கம் தருக.
4. 'நமசிவய' என்னும் திருவைந்தெழுத்தின் விளக்கம் தருக.

IV. உங்கள் தொழிற்சாலையில் புதிதாக தயாரித்திருக்கும் கண்ணன் குளிர்சாதனப் பெட்டிகளை விற்க, கருநாடக மாநில மாவட்ட தலைநகரங்களில், கிளை அலுவலகங்களைத் திறக்கக்கோரி, மேலாளர் என்ற முறையில், அதன் நிருவாக இயக்குநருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக. 8

V. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக. 9

காலனிய நவீனச் சூழல்களில், மீண்டும் தமிழரின் தத்துவார்த்த அடையாளம் சிற்சில குறிப்பிடத்தக்க மாறுபாடுகளுடன் தன்னை எடுத்துரைக்க முனைந்துள்ளது. 19 -ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழர்கள் தமது கடந்த காலத்தை, மரபுகளை மீள்பார்வைக்கு உள்ளாக்கி தமிழ் அடையாளத்தை மறுவரையறை செய்ய முன்வந்துள்ளனர். மேற்கத்திய நாகரிகத்தின் தீவிரமான தாக்கத்தின் ஊடாகத் தமிழர்கள் தமது மரபை எடுத்துரைக்க முனைந்தனர் என்ற செய்தி, பண்பாட்டுக் கடந்த காலம் குறித்த தமிழர்களின் தன்னம்பிக்கையை, சுயமரியாதை உணர்வைக் சுட்டிக்காட்டுகிறது எனலாம். இன்னொருபுறம் நவீனமயமாக்கம் என்ற நிகழ்வுப் போக்கைத் தமிழ்ச் சமூகம் விரிப்புடன் எதிர்கொண்டது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். பண்பாட்டுத் தன்னம்பிக்கை, நவீனமயமாக்கம் என்ற இரண்டு எல்லைகளுக்கு நடுவிலான இயங்கியல் பலபடித்தானதாகத் தொழில்பட்டுள்ளது. வேறுவார்த்தைகளில் சொல்லுவதானால், மேற்கத்திய நாகரிகத்தை எதிர்கொள்வதிலும் நம்மை நாமே அறிவித்துக் கொள்வதிலும் பலவகையான மாதிரிகள் விளைந்தன எனலாம். காலனியச் சூழலில் மேலெழுந்த ஒவ்வொரு சமூகப் பிரிவும் வெவ்வேறு விதமாக மேற்படி இயங்கியலில் தொழில்பட்டன. தமக்குள் அவை போட்டிகளிலும் ஈடுபட்டன.

-oOo-